நவீன இலக்கியத்தில் பெண்ணியப் பார்வை

அ. உய்க்காட்டராஜா
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியல்துறை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

முனைவர் த.க. ஜாஸ்மின் சுதா
உதவிப்பேராசிர்யர், தமிழியல்துறை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

ஆய்வுச் சுருக்கம்

நவீன இலக்கியத்தில் பெண்ணியப் பார்வை என்ற தலைப்பின் கீழ் தேநீர், தேயிலைக் கொழுந்து மற்றும் ஏலோலம் என்ற மூன்று நாவல்களையும் ஆய்வு எல்லையாக கொண்டு பெண்ணியச் சிந்தனை அல்லது பெண்ணிய நிலைபாடுகளை ஆராய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

முன்னுரை

பெண்ணிய நோக்கில் அல்லது பெண்ணியப் பார்வையில் ஆராய்வதை பொதுவாக பெண்ணியத் திறனாய்வு எனக் கூறப்படுகிறது. இவ்வாறான பெண்ணிய அனுகுமுறையை கொண்டு சோசலிஸ எதார்த்த படைப்பாளர்களில் குறிப்பிடத் தக்க எழுத்தாளர்களுள் டி. செல்வராஜ் அவர்களின் ''தேநீர் நாவலும், சி.ஆர் ரவீந்திரின் தேயிலைக் கொழுந்து மற்றும் ஜனநேசன் அவர்களுடைய ஏலோலம்'' ஆகிய மூன்று நாவல்களையும் பெண்ணியப் பார்வையில் ஆராய்வதாகவே இக் கட்டுரை அமைந்தள்ளது.

தேநீர் நாவலில் பெண்ணியப் பார்வை

பெண்ணியப் பார்வை அல்லது பெண்ணியச் சிந்தனையே ''பெண்ணியத் திறனாய்வு'' எனக் இங்கு கூறப்படுகிறது. சமுதாயத்தில் நசுக்கப்பட்ட அல்லது ஒடுக்கப்பட்ட பிர்வினர்களிடையே இன்று எழுச்சி நிலை என்பது பெருகிவருகிறது. ''இக்காலத்தில் பெண் என்பவள் தன்னை அதாவது தனது - இருப்பை - ஆளுமையை உணர்ந்தவள் என்ற பொருள், முன் உரைக்கப்படாமல் இருந்தது'' (திறனாய்வுக் கலை - பக் 218) என்று பேரா தி.சு நடராசன் முன்பு இருந்த பெண்களின் நிலையை சுட்டுகிறார். ஆனால் இன்று பெருமளவில் அது உணரப்பட்டாலும் கூட இன்னும் முழுமையாக அது அனைவர்டமும் சென்று அடையவில்லை என்று தான் கூறவேண்டும். தற்காலத்தில் நவீன இலக்கிய உலகில் வெளிவரும் எதார்த்த நாவல்களில் உள்ள கட்டமைப்புகளை ஆய்வுக்கு உட்படுத்துவதன் மூலம் இதனை அறியமுடியும்.

*பெண்ணியத் திறனாய்வ என்பது ''பிரான்சு நாட்டைச் சேர்ந்த சய்போன் தெ பௌவோ (*Simone De Beauviouir*) எழுதிய இரண்டாவது பாலினம் (*The Second Sex 1949*) என்ற நூலை முன்னோடியாகக்கொண்டு, பெண்ணியம் ஓர் அறிவார்ந்த கொள்கையாகவும் போராட்டக் கருவியாகவும் முன்வைக்கப்பட்டது.'' (திறனாய்வுக் கலை பக் 219) என பேரா தி.சு நடராசன் சுறுகிறார்.*

பொதுவாக இலக்கியத்தில் பெண்ணியம் என்பத மூன்று வகையாக கூறப்படுகிறத.

1. *பிரஞ்சுப் பெண்ணியத் திறனாய்வு இது முக்கியமாக உளவியல் பகுப்பாய்வு முறையில் பெண்ணியத்தை விளக்குகிறது.*

2. ஆங்கில பெண்ணியத் திறனாய்வு - இது முக்கியமாக, மார்க்சிய ஒளியில் பெண்ணியத்தை விளக்குகிறது.
3. அமெர்க்க பெண்ணியத் திறனாய்வு - இது முக்கியமாகப் பனுவலை மையமிட்டு அமைகிறது.

(திறனாய்வுக் கலை பக். 220) இவ்வாறாக கூறப்படும் பிர்வுகளில் இந்திய சமுகக் கட்டமைப்பிற்கோ அல்லது தமிழ்ச் சமுகக் கட்டமைப்பிற்கோ இது என அறுதியிட்டு கூறிவிட முடியாது. இவை முன்றின் தாக்கமும் இங்குக் காணப்படுகிறது.

பெண் மலைத்தோட்ட தொழிலாளர்களின் வாழ்வியல்

"கண்கானி ஊட்டு கோழி கூவிட்டதுவிள எந்திர்ச்சு அடுப்பை மூட்டு" (தேநீர் பக்.01) என்று கணவன் ஒருவன் அசந்த துக்கத்தில் இருக்கும் தன் துணைவியை எழுப்பும் குரல் அது தேயிலை தோட்டத் தொழிலாளர்களை மையமிட்டு எழுதப்பட்ட நாவல் தேநீர் என்ற நாவலின் ஒரு வர் இது. அதாவது தோட்ட தொழிலாளர்கள் என்றாலே அதிகாரத்திற்கும் அடக்குமுறைக்கும் கட்டுப்பட்ட அடிமைத்தன வாழ்வியல் கொண்ட ஒரு சூழலில் கூட ஆணாதிக்கம் எவ்வாறு காக்கப்படுகிறது என்பதை இந்நாவலின் ஒற்றை வர்யினை கொண்டே ஆய்வுக்கு உட்படுத்த முடியும். அவ்வாறு ஆய்விற்கு உட்படுத்த காலந்தோறும் தேவைக்கேற்ப்ப மாற்றம் கொண்ட பெண்ணியச் சிந்தனை மற்றும் பெண்ணியக் கருத்தியல்களை நாம் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகிறது. இவ்வாறான பெண்ணிய சிந்தனைகளை நாம் கருத்தில் கொள்ளாமல் ஆய்வு மேற் கொண்டால் முதலாளித்துவ அதிகாரமும் தொழிலாளியின் வாழ்வியல் போராட்டமும் என்ற போக்கு மட்டுமே நம்மால் காணமுடியும். தேயிலைக் கொழுந்து நாவலில் பெண்ணியம்

தேயிலைக் கொழுந்து என்ற நாவலின் தொடக்கத்திலேயே பெண்களின் நிலை பற்றிய ஒரு சிறிய காட்சி "கண்னை உறுத்துகிற மாதிர் இருக்கிற சிறு வயசுக்கார்களை கோல்மேஸ்திர்களும், கிளர்க்குகளும் மடக்கி பொட்டுக் கொள்வர்கள் என்று நன்றாகவே தேர்யும் காத்தாயிக்கு" (தேயிலைக் கொழுந்து பக் 13) இன் நாவல்வர்யின் மூலம் பெண்களுக்கு எதிராக நிகழும் அநீதியை தெர்ந்தும் அதனை ஒழுங்கு செய்ய முடியாத ஓர் கால சூழல் இருந்திருக்கிறது என்பதை அறிய முடிகிறது. ஒரு புனைகதையில் பெண்கள் எவ்வாறு படைக்கப்படிருக்கிறார்கள் என்று பாப்பது மட்டும் போதாது பெண்களை மவுனிகளாக்கி மிகச் சர்யாக எந்த எதிர்ப்பும் காட்டாமல் அதிகார வர்க்க ஆண்கள் அல்லது ஆண்கள் அடக்கு முறைகளுக்கு கட்டுப்பட்டு இருப்பதையும் எடுத்துகாட்டுவதே பெண்ணிய திறனாய்வு எனக் கூறலாம் சான்றாக "ஆண்களின் தன்னிச்சையான போக்கு என்பதும் பெண்ணடிமைத்தனத்தின் இன்னோறு நிலையாகும்". (திறனாய்வுக் கலை பக் 221) என்று கூறும் பேரா. தி.சு. நடராசன் அவர்களின் வர்யை பொருத்திப் பார்ப்பதன் மூலம் இதனை நம்மால் கூறமுடிகிறது.

இவ்வாறான நிலை என்பது இன்றளவும் இலக்கியங்கள் வழியாகவும் செய்தித்தாள்கள் மற்றும் செவிவழிச் செய்தியாகவும் வந்து கொண்டே இருக்கிறது அதற்கு எதிரான மக்கள் போராட்டங்களும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது.

ஏலோலம் நாவலின் பெண்ணியச் சிந்தனைகள்

ஜனநேசன் எழுதிய ஏலோலம் என்ற நாவலானது பொன்னுதாய் என்ற முதன்மை கதாப்பாத்திறத்தை கொண்டு நகர்ந்தாலும் பல பெண்களின் வாழ்வியல் போராட்டங்களை நாவலில் ஆங்காங்கே பதிவு செய்து கொண்டே நாவல் நகர்கிறது. அதில் ஒரு கதாப்பாத்திரமான சிவனம்மா "ஏன் சிவனு பார்க்க லெட்சனமாக இருக்கே

கல்லியாணம் செஞ்சுகலாமில்ல'' (ஏலோலம் பக் 52) என்ற கேள்வியின் தொனியில் இக்கதாப்பாத்திர நகர்வு தொடங்குகிறது. சிறு வயதிலேயே தந்தையை இழந்த அந்த பெண் அம்மாவின் அரவணைப்பில் வளர்கிறாள். அவள் அம்மாவும் கடன் பெற்று விவசாயம் செய்தும், கூலி வேலை செய்தும் அவர்கள் வாழ்க்கை போக்கு அமைகிறது இவ்வாறான கால சூழலில் அவளது அம்மாவும் வயிற்று வலியில் இறந்து போகிறார் தந்தையையும் தாயையும் இழந்த ஒரு பெண்ணை இச் சமுதாயம் எவ்வாறு வஞ்சிக்கிறது என்பதை ''தாய்மாமனுக்க திருமணம் மாமனுக்கு இரண்டு பொண்டாட்டி எட்டு கொழந்தைகள் அவனுக்கு வயது 50 எனகு பன்னென்டு ஏணி வச்சாலும் எட்டுமா'' (ஏலோலம் பக் 32) இந்நாவல் வர்கள் மூலம் அறிய முடிகிறது.

இவ்வாறான கட்டாயத்திருமணத்தில் இருந்து ஒரு பெண் தனியாக போராடி அங்கிருந்து தப்பித்து நிம்மதியான வாழ்க்கையை நாம் இனி உழைத்து வாழலாம் என்ற எண்ணத்தோடு' வட்டப்பாறை அருகில் உள்ள ஏல மலைக்கு வந்தாள் அங்கு அவள் தன் பெண்மையை காக்க போராடவேண்டியிருந்தது தனியாக வந்து ஒரு இளம்பெண் சமுதாயத்தில் உழைத்து வாழ்வதற்கே எவ்வளவு சவால்கள் என ''அம்மாடி பட்டாபூச்சி தலையில் பாறாங்கள் வைத்த மாதிர் இவ்வளவு சோகமா'' (ஏலோலம் பக் 57) முப்பது வயதிற்குள் ஒரு பெண் சமுதாயத்தில் தனியாக தனது அடையாளத்துடனும் ஆளுமையுடனும் வாழவேண்டும் என்று முடிவு செய்கிறாள். அதற்காக அவளுக்கு எதிராக நடக்கும் இன்னல்களையும் அதனை அவள் எவ்வாறு எதிர் கொள்கிறாள் என்ற நேர்மறை சிந்தனையுடன் கதைப் போக்கு என்பது அமைந்திருக்கிறது.

''அதாவது எழுத்தாளர்கள் ஆண்களா, பெண்களா என்பது முக்கியம் இல்லை அவர்களின் எழுத்துகள் தான் முக்கியம்'' (திறனாய்வுக் கலை பக் 221) என்று கூறும் பேரா தி.சு நடராசன் அவர்களின் கூற்றிற்கேற்ப இந்நாவல் அமைந்துள்ளது. பெண்களுக்கு எதிராகச் இச்சமூகத்தில் நடைபேறும் சிக்கல்களையும். அதனை அவர்களே எதிர்கொள்ளும் போக்கினையும் இன்றையசமுதாயபெண்களின்வாழ்வியலில் ஏற்பட வேண்டிய நேர்மறை சிந்தனைகளை கொண்டும் எவ்வாறாக மன வலிமை இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இப்படைப்பு படைக்கப்பட்டுள்ளதோ எனத் தோன்றுகிறது.

முடிவுரை

தமிழ் இலக்கியவுலகில் பெண்ணியச் சித்தர்ப்புகள் எவ்வாறு இருக்கின்றன என்பதை மேற்கூறிய மூன்று கோணங்களில் பாாப்பது என்பது முக்கியமாகும். புனைகதைகளில் எவ்வாறு பெண்கள் படைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று பாாப்பது மட்டும் போதாது, அவர்கள் அடிமைப்பட்டு கிடப்பதை அவர்களே அறியாத நிலையில் இருக்கிறார்கள் என்பதை உணர்த்துவதுடன் பெண்ணியம் என்பது நிறைவு பெறாது ஆண்களின் தன்னிச்சையான போக்கும் பெண் அடிமைத்தனத்தின் இன்னொரு நிலைபாடு என்பதை காட்டவேண்டும் அதுவே பெண்ணியத்திறனாய்வாக அமையும் என்று இம்மூன்று கருத்து நிலையை கொண்டு இங்கு தேநீர், தேயிலைகொழுந்து மற்றும் ஏலோலம் என்ற முன்று நாவல்களிலிருந்தும் ஒவ்வொரு கதாப்பாத்திரத்தை கொண்டு இலக்கியத்தில் பெண்ணியப் பார்வை என்பது எவ்வாறு அமைய வேண்டும் என்பதை மையமிட்டு இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

துணை நூல்பட்டியல்

1. டி. செல்வராஜ் தேநீர், முதல் பதிப்பு, நியு செஞ்சுர் புக் ஹவுஸ், 2006
2. சி.ஆர். ரவீந்திரன், தேயிலைக் கொழுந்து, முதல் பதிப்பு, அறிவு பதிப்பகம் சென்னை, 2006

3. ஜனநேசன், ஏலோம், முதல் பதிப்பு, பாரதி புத்தகாலயம், சென்னை, 2022
4. க. கைலாசபதி, தமிழ் நாவல் இலக்கியம் நான்காம் பதிப்பு, குமரன் பதிப்பகம் சென்னை 1999
5. தி.சு நடராசன், திறனாய்வுக் கலை, ஒன்பதாவது பதிப்பு, நியு செஞ்சுர் புக் ஹவுஸ், 2012
6. கார்த்திகேசு சிவத்தம்பி, நாவலும் வாழ்க்கையும், முதல் பதிப்பு, நியு செஞ்சுர் புக் ஹவுஸ், 2013